804

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில்

10 AUG 1955

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஆனி, ௨௧ 15—7—55 தளிர்-41

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

# ஒழுங்கும் ஒழுக்கமும்

மனித்தப் பிறவி ஆறாவது அறிவின் சிறப்புடையது. ஆறாவது அறிவு என்பது மன அறிவு. அதாவது உள்முக ஒழுங்குப் பயிற்சி!

கல்வி என்பது இதனையே சிறப்பாக உணர்த்தும்; மனக் கோட்டம் தீர்த்தல் என்று இதனைப் பெரியோர் குறிப்பர்; கல்வியை உண்டாக்கும் கருவிக்கு 'நூல்' என்று பெயர்; காரணம், மனம் முதலியவற்றின் கோணலைத் தீர்த்து ஒழுங்கை வாழ்க்கையில் உண்டாக்குவதனால் என்பது; மரத்தின் கோணலை நீக்குவதற்குத் தச்சர் பஞ்சு நூலைக் கையாள்வர். மாணவர்கள் தம் மனத்தின் கோணலை நீக்கிக்கொள்வதற்குப் புத்தகம் என்னும் நூலைக் கையாள்கின்றனர். ஆகவே, கல்வி என்பது ஒழுங்குப் பயிற்சியே என்க.

நேர்மை பெறுவது 'ஒழுங்கு' என்றால், அந்த ஒழுங்கைக் கடைசிவரையில் தவறு நேராதபடி கடைப்பிடித்து வருவது 'ஒழுக்கம்' ஆகும். இத்தகைய ஒழுக்கமுடைமை, கல்வியால் மட்டும் உண்டாவதன்று; தக்கவர்களிடையில் இருந்து பல காலம் பழகி வருகின்ற மரபுநிலையால் உண்டாவதாகும். தாய் தந்தையர், உடன் பிறந்தார் முதலியவர்கள் தக்கவர்களாய் இருக்கும் குடியில் வழி வழிப் பழகிவரும் மக்களுக்கு 'ஒழுக்கம்' என்னும் இத் தொடர்ந்த பழக்கம் இயல்பான உடைமையாய் இருக்கும்.

பிறந்த குடியின் உயர்ந்த சூழலைத்தான் 'இற்பிறப்பு' என்றும், 'குடிமை' என்றும், 'குலத் தன்மை' என்றும், 'உயர் பிறவி' என்றும், 'நல்லினப் பண்பு' என்றும் நம் முன்னோர் வழங்கினர். இதனாலேதான் 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றும், அதன் இழுக்கம் இழிந்த பிறவி என்றும் ஆசிரியர் தீர்த்துத் தெளிவாக்கினார்.

ஒழுங்கு தெரிந்திருப்பது வேறு, ஒழுக்கம் அடைந்திருப்பது வேறு; ஒழுங்கு என்பது மன நலம், ஒழுக்கம் என்பது இன நலமாகும். 'மனநலம் நன்குடையராயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்புடைத்து' என்று ஆசிரியர் வேறு வகையிலும் இதனைத் தெளிவாக்கியது காண்க.

ஒழுக்க முடைமை குடிமை, இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

ஒழுக்கம் உடைமை குடிமை— குலத் தன்மை என்பது நன்னடத்தை பெற்றிருத்தலாகும். இழுக்கம் — நடத்தைத் தவறு, இழிந்த பிறப்பாய் விடும்— தாழ்ந்த பிறவியாய்க் கருதச் செய்யும்.

ஒழுக்கம் என்பது நன்னடத்தையைத் தொடர்பாகக் காத்து வருதல். குடிமை என்பது சிறந்த மரபை உணர்த்தும். நன் மக்கள் சூழலால் உண்டாகும் நற்பழக்கம் நன்னடத்தையைத் தொடர்பாகக் காத்துவர உதவுதலின், 'ஒழுக்கமுடைமை குடிமை' என்றார்.

காத்து வருதலாவது நடத்தை தவறுதற்கு இடம் நேர்ந்த போதும் தவறு நேராதபடி காத்துக்கொள்ளுதலாகும்.

குடிமைக்கு அடையாளம் ஒழுக்கமுடைமையே, அதாவது ஒழுக்கமுடைமையால் மரபின் மேன்மை உணரப்படும் என்பது.

நடத்தைத் தவறு இழிந்த மரபைக் குறித்துவிடும் என்பது தோன்ற, 'இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்' என்றார். இங்கே பிறப்பு என்றது, மரபைச் சுட்டியது. விடும் என்னும் விகுதி, துணிவுப் பொருள் தந்தது.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | மன்மத, ஆனி, | தளிர் |
|---|---|---|
| 7 | 15-7-55 வெள்ளி. | 41 |


# கல்லூரியில் கற்பிக்கும் மொழி

அண்மையில், சென்னை அரசியலார் ஆதரவில், கல்லூரிகளில் பாடங்களைப் பயிற்றுவிக்கும் மொழி தாய்மொழியா யிருத்தல் வேண்டும் என்பது பற்றி, சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. சென்னை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் இருபெருந் துணை வேந்தர்களும், எல்லாக் கல்லூரித் தலைவர்களும், பல்வேறு துறை அறிஞரும் ஆக நூற்றுவருக்கு மேல் குழுமி, மேற்புகன்ற பொருள் பற்றி ஆராய்ந்தனர். முடிவில், பாடங்கள் பயிற்றுவிக்கும் மொழி தமிழாக இருத்தல் வேண்டும். படிப்படியாக இம்முறையை நடைமுறையில் கொண்டுவா வேண்டும் என்று பெருவாரியான அறிஞர்களால் தீர்மானிக்கப்பட்டது. தமிழில், நுண்கலைச் சொற்கள், தொழில் நுணுக்கச் சொற்கள் அறிவியற் சொற்கள் ஆகியவற்றை அமைக்க, ஓர் வல்லுநர் குழுவை (Experts Committee) ஏற்படுத்தவும் முடிவு செய்தனர். இந்த நல்ல முடிவைப் பாராட்டுகிறோம். இது மேலும் செயலளவில் உருவாகிப், பயனளிப்பதாக என்று வாழ்த்துகிறோம்.

வல்லுநர் குழு என்று அமைத்து, அதில் தமிழ் நன்கு தெரியாதவரையோ, அல்லது ஆங்கிலத்தை நன்கு அறியாதவரையோ பொறுப்பேற்கச் செய்தால், நாம் எதிர்பார்க்கும் பயனளிக்காமலும் போகக் கூடும். எனவே, இருமொழிகளிலும் வல்லவரை, ஆழ்ந்து ஆராய்ந்து தேர்ந்தெடுப்பது அரசியலார் கடமை.

தமிழைவிடப் பல விதங்களில் குறைபாடுடைய இந்தி மொழி, நாட்டுமொழியாக வருவதற்கும், பயிற்றுவிக்கும் மொழியாய் இலங்குவதற்கும் வாய்ப்பிருக்கிறதென்றால், தமிழ் ஏன் முதன் மொழியாக வரக் கூடாது? எவ்வித ஐயப்பாடுமின்றி, இப்போதே பயிற்றுவிக்கும் மொழியாகத் தமிழை ஆக்கிவிடலாம். ஆங்கிலக் கலைச் சொற்களைமட்டும் அப்படியே வைத்துக் கொண்டு, மற்றவற்றைத் தமிழாக்கம் செய்வது, அவ்வளவு கடினமான செயலன்று. தமிழிலேயே அறிவியல் நூல்கள் சில ஆக்கப்பட்டு, தமிழ் நாட்டில் இலங்கி வருவதைக் கண்டிருக்கலாம். அவைகளில் சில அரசியலார் பரிசும் பெற்றிருக்கின்றன. அந் நூல்களைத் துணைக் கொண்டு, உடனடியாகத் தமிழில் பாட நூல்களைத் தோற்றுவித்து, தமிழைக் கற்பிக்கும் மொழியாக ஆக்க வாய்ப்பிருக்கிறது; வசதியும் இருக்கிறது. அரசியலாரின் வாய்மொழிதான் தேவை.

இந்திக் கலைச் சொற்களைக் கண்டுபிடிக்க ஏற்படுத்திய குழு வெற்றிகரமாகத் தனது செயலைச் சாதித்ததைக் கண்டாவது நமது அரசியலாருக்கு ஆர்வம் தோன்றட்டும். அவ்வார்வத்தை அடிப்படையாகக் கொண்டு, உடனடியாக ஆக்க வேலையில் முனையட்டும். இம் முயற்சியில் தமிழ் மக்களின் ஆதரவு அரசியலாருக்கு என்றும் கிட்டும். ஏட்டளவில் திட்டம் தீட்டாமல், செயலளவில் ஆக்கம் காண முயல்வாராக; தக்க சமயத்தில் தோன்றியிருக்கும் இவ் விடிவெள்ளி, ஒளி வீசி ஒளிர்வதாக!

—T N. அருச்சுனன்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்து நிறுத்துங்கள்:

"நமக்குத் தெரியாத மொழியில் இசையை அனுபவிக்க எண்ணுவது, மனைவியிடம் வக்கீல் வைத்துப் பேசுவதற்கு ஒப்பாகும்" என்றார் கவிஞர் தாகூர். இந்த உண்மையை வானொலி நிலையத்தாரும் அவர்களை இயக்கும் அரசாங்கத்தாரும் உணர்தல் நல்லது; தமிழ்மக்கள் தமிழிலே இசையைக் கேட்டு மகிழ விரும்புகிறார்கள் அவர்களின் இயற்கையான காதலைத் தடுத்து, செயற்கையான—வெறுப்பான முறையில் பிறமொழிப் பாடல்களைத் திணிப்பதை, உடனடியாகக் குறைத்தல் வேண்டும்; நாளடைவில் நிறுத்தல் வேண்டும்.

## மரம் நடுவிழா

மனித சமூகம் வளர்ச்சி பெறப் பெற நாட்டின் காடுகள் அழிக்கப்படுகின்றன. இது மனித சமூகத்தின் வளர்ச்சியிலே ஒரு தவிர்க்க முடியாத அமிசம் என்றாலும் அதுவே மனித சமூகத்திற்கு நாளடைவில் கேடு பயப்பதாகவும் அமைகிறது. இதனை உணர மக்களுக்கு நீண்ட நாட்களாகிறது. அப்படி தாமே உணரத் தவறினாலும் இயற்கையே உணர்த்தி விடுகிறது. காட்டை அழித்தோம், நாடாக்கினோம், என்று பெருமைப்படுத்திக் கொள்ளும் மனிதனுக்கு இயற்கை தனக்குச் சிறுகச் சிறுக ஏற்படும் அழிவைக் கண்டு சீறி மழை தர மறுத்துப் பாடம் கற்பிக்கிறது.

நம் நாட்டில் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வானம் பொய்க்கவே அறிஞர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர். மழையின்மைக்கு முக்கிய காரணம் நாட்டின் வனப்பகுதி பெரும்பாலும் அழிக்கப்பட்டுவிட்டதே எனக் கண்டனர். எனவே வனத்தை வளர்க்க ஓர் இயக்கம் தோற்றுவித்துள்ளனர். இவ்வியக்கத்தை ஆரம்பித்த பெருமை இரண்டு ஆண்டுகட்கு முன் (1951) உணவு மந்திரியாயிருந்த முன்ஷியைச் சாரும்.

மரங்கள் தம் வேர்கள் மூலம் தரையிலுள்ள நீரை உண்டு இலைகள் மூலம் நீராவியாக வெளியிடுவதால் வனப் பகுதியில் எப்பொழுதும் குளிர் நிலவும்; கடல் நீர், கதிரவன் வெப்பத்தால் ஆவியாகிப்பின் கருமுகிலாய் வானில் எழுகிறது; பின் அவை குளிர் நிலவும் வனப்பகுதிவழிச் செல்லும்பொழுது அங்கு நிலவும் குளிரால் கருமுகிலும் குளிர்ந்து அவற்றிலுள்ள ஆவி நீராகி மழையாகப் பொழிகிறது இதுவே வன விழாவின் அடிப்படைத் தத்துவம்.

சிறந்த நோக்கத்துடன் துவக்கப்பட்ட இவ்வியக்கம் இன்று நடத்தப்படும் முறை வருந்தத்தக்கதாயுள்ளது. வனத்தை வளர்ப்பதானது தனித்தனி மனிதர்களால் கட்டுப்பாடற்ற முறையில் சாதிக்கக் கூடிய செயலன்று அரசாங்கம் இவ்வேலையை மேற்கொண்டு திட்டமிட்ட முறையில் செய்ய வேண்டும். இதற்கு முதலில் நாட்டிலே வனங்கள் வளர்க்கப்பட வேண்டிய, வளர்க்கத் தகுதியான இடங்களைத் தேர்ந்தெடுத்து ஆயிரம் பதினாயிரக்கணக்கான அளவில் மரங்கள் நடப்பட்டு அவை தொடர்ந்து காட்டிலாகாவால் பாதுகாக்கப்பட வேண்டும். இங்ஙனமின்றி ஆண்டுக்கு ஒரு முறை மந்திரிகளாலும், கவர்னர்களாலும் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் செடிகள் நடுவதால் வனம் உருவாகிவிடாது. இங்ஙனம் நடப்பட்ட செடிகள் ஆட்டுக்கும் மாட்டுக்குமே இரையாகும். கேவலமான நிலைதான் ஏற்படும்.

வானம் பொழிவது மட்டுமே வனங்களால் ஏற்படும் நன்மையல்ல. வனங்களே நாட்டின் சிறந்த செல்வம். தேக்கும், சந்தனமும், மிளகும் கட்டட நிர்மாண வேலைக்கான மரங்களும் மணப் பொருள்களும் உணவுப் பொருள்களும் நல்கி நாட்டின் பொருளாதாரத்தை வளம்படச் செய்கின்றன. மேலும் பல ஞானிகளுக்கும், கவிகளுக்கும், அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் வனமும் அதன் அழகிய சூழ்நிலையும் பெருநலம் பயக்கின்றன.

போதி மரத்தின்கீழ் ஞான ஒளி பெற்ற புத்தரைப் போன்ற ஞானியையும், வனத்தின் வனப்பிலே திளைத்துக் கவிதைப் பெருக்கை அளித்த வால்மீகியைப் போன்ற மகாகவியையும், வனத்தின் செடியோடு செடியாய்க் கொடியோடு கொடியாய், மானோடு மானாய் வளர்ந்த சகுந்தலையையொத்த மங்கை நல்லாளையும் நாட்டுக்கு வனமே வழங்கியிருக்கிறது எனலாம்.

ஆகவே, இவ் விழா வளரச் சிறந்த முறையில் அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அரசாங்கம் செய்வதுமட்டுமின்றிப் பொதுமக்களும் அதற்கு அமோக ஆதரவளித்தால் இவ் வன விழா நிச்சயம் வெற்றியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

(மா. கோவிந்தராசன்)

---

## முல்லைக் கொடி

இவ்வாண்டு, ஜூலை இறுதிக் கிழமை வெளியீடு குறள் மலராக மணக்கும்.

1. 'பொதுமறை விளக்கம்.'
ஆசிரியர் இளவழகனார்.

2. "முப்பால் நுட்பம்-"
திரு. ந. ரா. ஆடலரசு.

3. "குறளும் அருளும்."
திரு ந. ரா. முருகவேள். B O. L.

4. "வள்ளுவம்–காலங் கடந்து நிற்கும் அறம்."
திரு. தி. பாலசுப்பிரமணியம்.

மற்றும் பலர் எழுதுகின்றனர்.

தமிழ் இசைச் சங்கம்

# வானொலியில் தமிழிசை!

(டாக்டர் மு வரதராசனார்)

"வானொலியில் தமிழ்ப் பாட்டுக்கு இடம் என்ன? வானொலியார் கணக்கெடுத்துப் பார்க்கின்றனரா"? என்று கேட்டிருக்கிறார், இந்த ஆண்டில் தமிழிசை விழாத் தலைவரான பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.

## உணர்ந்தவர்களின் உள்ளப் புழுக்கம்:

இந்தக் கேள்வி, பலருடைய உள்ளத்தில் பல நாள் எழுந்துள்ள கேள்வியே ஆகும். ஆனால் என்ன செய்வது என்ற திகைப்பால் பெரும்பாலோர் வாய்மூடிக் கிடக்கிறார்கள். இந்தக் காலத்தில் மக்கள் குரல் ஆட்சியாளர்க்கு எட்டுவது அரிது ஆயிற்று. 'மகசர் எழுதினாலும் பயன் இல்லை; மாநாட்டில் தீர்மானித்தாலும் பயன் இல்லை; தேர்கல் செல்வாக்கு உள்ளவர்கள் நேரில் சென்று முறையிட்டால்தான் ஒரு சிறிது பயன் விளையக் கூடும்; நாம் என்ன செய்ய முடியும்' என்று கலைஞர்கள் வாய்மூடிக் கிடக்கிறார்கள். வானொலித் துறையில் மாகாண அரசாங்கம் ஒன்றும் செய்யமுடியாது. எல்லாம் மத்திய அரசாங்கம் (டில்லி அரசாங்கம்) மனம் வைத்தால்தான் ஏதேனும் செய்யமுடியும். வானொலி அதிகாரிகள் டில்லி அரசாங்க ஊழியர்கள்; ஆகையால், மாகாண மக்களின் குரலை அவர்கள் பொருட்படுத்த வேண்டிய நிலையில் இல்லை என்ற உண்மையை உணர்ந்தவர்கள், உளம் புழுங்கி அமைதியாகக் கிடக்கிறார்கள்.

## உண்மை உணர வேண்டும்:

மக்களின் விருப்பம் எது, அது நியாயமான விருப்பந்தானா என்று ஆராய்வது மக்களாட்சிக்கு இன்றியமையாத கடமைதான். மக்கள் விருப்பம்—பெரும்பாலான மக்கள், அல்லது தக்கவர்களான நன் மக்களின் விருப்பம் எது என்று அறிந்துகொள்ளும் முயற்சியே காணோம்!

மக்களின் விருப்பம் எது என்று தனித்தனியாக ஒவ்வொருவரையும் கேட்கத் தொடங்க வேண்டியதில்லை; கணக்கு (சென்ஸஸ்) எடுக்க வேண்டியதுமில்லை; இசைத்துறையில் மக்கள் எந்த மொழிப் பாட்டுகளை விரும்புவார்கள் என்ற இயற்கையான உண்மையை அறிந்தாலும் போதும். "இசையில் சங்கீதம் உயிர் என்றால், சாகித்தியம் உடல் ஆகும் என்ற உண்மையை உணர வேண்டும்" என்று மேற் குறிப்பிட்ட பேராசிரியர் தமது தலைமையுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். தியாகய்யர் அவர்கள் கருநாடக சங்கீதத்தில் பாடத் தொடங்கியபோது, அதுவரையில் கருநாடக இசை வளர்ந்து வந்த தமிழ் மொழியை மேற்கொள்ளாமல், தெலுங்கு மொழியை மேற்கொண்டது ஏன் என்று கேட்டிருக்கிறார். அவருடைய தாய் மொழி தெலுங்கு ஆகையாலும், தாய்மொழியின் சாகித்தியமே இசையின் பயனை நல்கும் என்பதை நன்கு உணர்ந்தமையாலுமே அவர் தெலுங்கில் பாடினார். இந்த உண்மையை உணர்ந்தாலும் போதும், டில்லி அரசாங்கத்தின் வானொலியார் செய்யும் செயல்களில் முன்னேற்றம் ஏற்படும்.

பழைய சாகித்தியங்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற குறிக்கோளும் நல்லதே; ஆனால் அதற்கு ஒரு பகுதி நேரம், அல்லது ஒரு வாரத்தில் ஒரு நாள் ஒதுக்கிவைத்தாலும் போதும். பழமையைக் காப்பாற்றுவதே கடமையாகக் கொண்டு, மக்களின் கலையார்வத்திற்குத் தீங்கு செய்தல் கூடாது.

## இவை யாருக்காக?

தமிழ் நாட்டில் சென்னையிலும் திருச்சியிலும் வானொலி நிலையங்கள் உள்ளன. திருச்சியில் ஏறக்குறையத் தமிழர் சுவைக்கவல்ல இசை கேட்கிறது. ஆனால் சென்னை வானொலியின் நிலை, நாட்டுமக்களின் கலையார்வத்திற்குப் பொருந்தாததாக உள்ளது. சென்னை நகரம் ஆந்திரர்க்கும் தமிழர்க்கும் பொதுவான சத்திரமாக இருந்தபோது, வானொலி ஒருவகைப் பொது நிலையமாக இருந்தது பொருந்தும். இன்று ஒரு சில கன்னடரும் ஒரு சில மலையாளிகளும் விட்டுப் போக மாட்டோம் என்று ஒட்டிக் கொண்டிருந்தாலும், சென்னை தமிழ் நாட்டின் தலைநகரம் என்பது மக்களின் தீர்ப்பு ஆகிவிட்டது. மாகாண அரசாங்கத்தின் தீர்ப்பு ஆகிவிட்டது. நிலைமை இவ்வளவு மாறிய பிறகும், சென்னை வானொலியில் ஸ்வாகதம், கீதாஞ்சரி, கீதமாலிகா, லலிதகீதம், சுருதிமணியாலா, லலித கானம், சந்த்யா கானம், கானலஹரி முதலாய பகுதிகள் யாருக்காக நிகழ்கின்றனவோ, தெரியவில்லை!

## மக்கள் விருப்பம் அறிந்து நடக்க வேண்டும்:

ஸ்வாகதம் முதலான இந்தத் தலைப்புக்களே மக்கள் விரும்பாதவை; மக்களுக்கு விளங்காதவை. ஒரு சில சங்கீத வித்வான்களுக்கு விளங்கக் கூடியவைகளாக இருக்கலாம். ஆனால்

வானொலி நிலையம் ஒரு சில வித்வான்களுக்காக ஏற்பட்டது அன்று; பொது மக்களுக்காக ஏற்பட்டது, இந்தத் தலைப்புக்கள் எந்தமொழியில் இருந்தால்என்ன என்று கேட்கலாம்; மக்களின் தாய்மொழி இருக்கும்போது அதைப் புறக்கணிக்கும் செயலுக்கு அறிகுறியாக இருப்பதால், வெறுப்புக்கு இடமாகிறது என்பது கருதப்பட வேண்டும். இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அதிகாரிகள் வற்புறுத்துவதைவிட, இப்படி இருந்தால் மகிழ்வோம் என்று மக்கள் விரும்புவதை அறிந்து நடப்பது நல்லதாகும். ஆகையால் இந்தச் சில்லறை மாறுதல்களையும் அரசாங்கத்தார் பொருட்படுத்திச் செய்வது கடமையாகும்; சிறு சிறு சிக்கல்கள் வளர இடம் கொடுத்துக் கொண்டு, மக்களின் மனத்தில் வெறுப்பு வளரச் செய்வது நல்லது ஆகாது.

## விளங்காப் பாடலால் பயன் என்ன?

தலைப்புக்கள் எப்படியாவது போகட்டும் என்று விட்டுத் தள்ளி, வானொலியைத் திருப்பி இசை கேட்க முயன்றால், உயிர் மட்டும் ஊசலாடுகிறது; உடல் உணர்ச்சியுள்ளதாக இல்லை. சங்கீதம் கேட்கிறது; ஆனால் மக்கள் விரும்பும் சாகித்தியமாகிய உடல் அதற்கு அமையாமையால், எதிர்பார்த்த கலைவிருந்து கிடைக்காமல் மக்கள் ஏமாற்றமும் அடைகின்றனர். இவ்வாறு விளங்காத சாகித்தியங்களை மக்களின் செவியில் திணிப்பதை விட, வாய்ப்பாட்டு என்ற பகுதியையே எடுத்துவிட்டு, நாதசுரம், குழல், வீணை முதலிய வாத்திய இசைகளை மட்டும் (பாட்டு இல்லாமல்) வைத்து நிகழ்ச்சி முழுவதும் அமைத்து விடலாம். ஏன்? இப்படிப்பட்ட கருவிகளின் இசையைக் கேட்க எல்லாரும் விரும்புகின்றனர். ஆனால் வேளை—சமயம்—நாள் ஒன்றும் வரையறை இல்லாமல், எந்த நேரமும்—எப்போதும்—விளங்காத சாகித்தியங்களைத் திணித்தால் மக்கள் எப்படி விரும்பமுடியும்? வெறுங் கீற்றுக்களால் ஆகிய ஓவியங்களை, யாரும் வெறுப்பதில்லை; ஆனால் வண்ண ஓவியங்கள் என்று சொல்லிப் பொருந்தாத வண்ணங்களைத் தீட்டிக் காட்டுவதால் பயன் என்ன? தெலுங்கு வடமொழிச் சாகித்தியங்களில் மிக உயர்ந்தவை உள்ளன என்பதை யாரும் மறுக்கவில்லை ஆனால் தெலுங்கும் வடமொழியும் தெரிந்தவர்களுக்குமட்டுமே அவை பயனுள்ளனவாக இருக்கும். அவற்றைக் கற்ற தமிழர், ஆயிரத்துக்கு ஒருவரே அவர்களுக்காக வாரத்தில் ஒரு நாள் உயர்ந்த சாகித்திய விருந்து அளிக்க வானொலியார் ஏற்பாடு செய்யலாம்.

## கருத்து அறிந்து திருத்த வேண்டும்:

ஆயிரத்துக்குத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேருக்கு ஆற்றவேண்டிய கடமையை வானொலி மறக்கலாமா? இன்று அவ் வானொலி மறந்து வருகிறது என்று சொல்வதை விட, புறக்கணித்து வருகிறது என்று சொல்வது பொருந்தும். இத்தகைய புறக்கணிப்பின் பயனாகத் தீமை விளையும். இந்திய நாட்டு ஒற்றுமையை நாடுவோர், இப்படிப்பட்ட தீமை விளைய இடந் தரக் கூடாது. இன்று வானொலியைத் திருப்பும் பலர், இங்கும் வடநாட்டு அரசாங்கத்தின் ஆதிக்கமா என்று எண்ணி வருந்துகிறார்கள். ஏன் இந்த எண்ணத்திற்கு இடம் தரவேண்டும்? எண்ணம் தவறாக இருக்கலாம். இப்படித் தவறான எண்ணம் ஏற்படக் காரணம் என்ன என்று அறிந்து திருத்தங்கள் செய்ய வேண்டும்.

## உண்மைக் கலைத் தொண்டு ஆகாது:

இன்று தமிழ்நாட்டுக் கடைத்தெருக்களிலும் வீடுகளிலும் உள்ள வானொலிப் பெட்டிகளில் பெரும்பாலானவை, இலங்கை வானொலியில் வரும் தமிழ்ப்பாட்டுக்களையே ஒலிக்கின்றன. தெருவில் நடந்து செல்வோரும், ஓட்டல்களில் காப்பி அருந்துவோரும் இதை நன்கு அறிவர். மாலை 6, $6\frac{1}{4}$ மணி என்றால், எந்த வானொலிப் பெட்டியிலும் இலங்கையிலிருந்து வரும் தமிழொலியே கேட்கிறது சிறுவர்முதல் முதியோர்வரையில் அதைக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர் சென்னை 1 சென்னை-2 என்றால், தமிழ்ச் செய்தி நேரம் தவிர மற்ற நேரத்தில், வானொலியைத் திருப்பிக் கேட்க விரும்பாமல் நிறுத்திவிடுகின்றனர். இந்த உண்மையை இனியும் உணராமல், யாரோ ஒரு சிலர் தமிழ் நாட்டிலிருந்து தெலுங்குவடமொழி சாகித்தியங்களுக்காக முறையிடும் முறையீடுகளைக் கேட்டு அவர்களின் விருப்பம்போல நடக்கக்கூடும். அந்த ஒரு சிலர் வேறு துறையில் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கலாம்; அடிக்கடி செய்தித்தாளில் பெயர் வந்தவர்களாக இருக்கலாம்; அவர்களின் பதவி பட்டம் முதலியவைகளைமட்டும் பார்த்து, மக்கள் பெரும்பாலோரின் வேட்கையை—நியாயமான வேட்கையை—புறக்கணிப்பது, மக்களாட்சிமுறைக்குப் பொருந்தாது; உண்மையான கலைத் தொண்டும் ஆகாது அது.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## நீ யார்?

(—'மணி மொழி')

நீலவான் திரையினிலே நிறம்பலவும் கூட்டி
செஞ்செல்லாம் இனித்திடவே ஓவியங்கள் தீட்டிக்
கோலமெல்லாம் சுவைத்திடுமுன் கொடுங்கையால் அழித்துக்
குறைவின்றிப் பின்னுமோர் உருவத்தை எழுதி
ஞாலமெலாம் பார்த்தின்பம் கொளல்வேண்டு மென்று
நான்திரும்பி நண்பனையே அழைக்குமுன் நீயோ
காலத்தின் செய்கையெனக் கடுகியே மறைத்துக்
கவின்பெருகு உருவத்தைக் காட்டுகிறாய் நீயார்? (1)

காண்கின்ற மலையெல்லாம் சிறிதெனவே தோற்றக்
காணாத பெருமலைகள் காட்டிடுவாய் அங்கே
வேண்டுகின்ற கனிமரங்கள் விதவிதமாய்ச் செய்து
விரைந்தோடும் வெள்ளருவி வரைந்திடுவாய் அடடா!
மான்துள்ளி விளையாடும் மயில்நின்று ஆடும்
மங்கையரின் இடையெனவே செங்கொடிகள் துவளும்
நான்கண்டு கண்டின்பம் பெறுமுன் அவற்றை
வானிருந்து அழிக்கின்றாய் அழிவில்லாய் நீயார்? (2)

நிலவொளியில் காண்கின்ற கடல்மணலின் அலைகள்
நிறைக்கின்றாய் வானத்தில் பின்னுமதன் மேலே
கலகலவென் றொலித்தாடும் குழந்தைகளைக் காட்டிக்
காதலனும் காதலியும் களிமுத்தங் கொள்ளும்
நலம்பெருகும் காட்சியெலாம் வரைகின்றாய் ஆனால்
நல்லறிவு உனக்கில்லை அழிக்கின்றாய் விரைந்து
பலநிறங்கள் உனக்கெங்கே கிடைத்ததடா இந்தக்
கலையெங்கு நீகற்றாய் சொல்லிடுவாய் நீயார்? (3)

பாலையெனப் பெருவெளியைப் படைக்கின்றாய் பின்பு
பாங்காகப் புள்ளினங்கள் பாடுகின்ற இன்பச்
சோலையினைத் தீட்டுகின்றாய் அதுவழித்து ஆங்கே
சொர்ணத்தைப் பூசுகின்றாய் சொக்கியங்கு நின்றால்
'வேலையில்லை'! எனக்கூறி விரட்டுவது போல
விரைவாக ஒளிக்கின்றாய் பின்னெழுந்து ஆங்கே
மாலையிலே மணியாட நடக்கின்ற நிரைகள்
மகிழ்ந்திடவே எழுதியுடன் அழித்திடுவாய் நீயார்? (4)

மலைகளிடை ஞாயிற்றை மறைந்தொளியச் செய்து
மாற்றுயர்ந்த பசும்பொன்னின் கதிர்களையே நீட்டிக்
கலையன்பர் கருத்தெல்லாம் கவர்ந்திடவே கன்னங்
கருமலையில் செந்நதியை விழுந்தோடச் செய்து
கொலைசெய்து குருதியிலே தோய்ந்திட்ட வாள்போல்
கோடுகொண்ட வேழங்கள் திரிவதையும் காட்டி
நிலைகொளாச் செந்தழலைச் சுற்றிவந்து வீரர்
நின்றாடும் படந்தந்து பறித்திட்டாய் நீயார்? (5)

## குருகுலச் செய்திகள்

**ஆட்சிக்குழு,**
**செயற்குழு அமைப்பு:**

குருகுல வளர்ச்சியிலும் தொண்டுகளிலும் கருத்திருத்தி ஆவன செய்யப், பெருமக்கள் ஆட்சிக்குழு ஒன்றையும், செயற் குழு ஒன்றையும் அமைக்க ஆசிரியர் எண்ணியிருக்கிறார். அவற்றில் இடம் பெறுபவர் பெயர்களும், அவரவர்க்கு அமையும் பொறுப்புகளும் முல்லைக் கொடியில் வரும்.

செயற்குழுவினர், ஆட்சிக்குழுவினரின் ஆதரவையும் குறிப்பையும் பெற்றுக் குருகுலத்தின் எல்லாப் பணிகளையும் பொறுப்பாக நடத்திவரும்.

**தொண்டர் படை:**

செயற்குழுவிற்கு உதவியாகத் தொண்டபடை இருக்கும். அதில், விரும்புகின்ற குருகுலத்தார் சேர்ந்துகொண்டு தொண்டாற்றலாம். ஆடவர் மாதர் இருபாலாருக்கும் இடமுண்டு. இவர்களுக்கெனத் தனி உடை அடையாளம் முதலியனவும் திட்டப்படுத்தப்பட்டுள்ளன. இதுபற்றிய விவரங்களும் இனி இதழில் வரும். முன்னர்ப் பெயர் கொடுத்திருப்பவர்களும் புதிதாக விரும்பிச் சேர்பவர்களும் உரிய தாளில் எழுதிக் கொடுத்து இத் தொண்டர் படையில் சேர்ந்துகொள்ள வேண்டும்.

**சென்னையில் குருகுலக்**
**கிளர்ச்சி நிலையம்:**

குருகுலத்தாரிற் பெரும்பாலோர் சென்னையில் இருப்பதனால், அவர்கள் அடிக்கடி கூடிக் கலந்து பேசிக் கிளர்ச்சி பெற்றுக் கொள்வதற்கும், மேல் மேல் தொண்டுகளைப் பொறுப்பாகச்

கொந்தளிக்கும் கடலினிலே குதித்தெழும்பும் அலைகள்
கொடிமரங்கள் நடுங்கிவிழ அலைமலரும் கலங்கள்
எந்தவிதம் எழுதுகின்றாய் எழில்வானில் மறைந்து
எனவற்றை அழிக்கின்றாய் இருக்கட்டும் அங்கே
கொங்கொடிந்த தமிழ்க்குலத்தின் வாழ்வெனவே காற்றில்
நெடிதாடி வலியிழந்து நிற்கின்ற மரங்கள்
விந்தையடா! விதவிதமாய் விரைகின்றாய் நீஏன்
விரைந்தவற்றை அழிக்கின்றாய் விளம்பிடுவாய் நீயார்? (6)

திண்தோளை முன்சாய்த்துப் பெருங்கையில் எட்டி
முன்பாய மேல்பாயும் மறவர்படம் தீட்டி
முன்காலைப் பின்காலே தூக்கிடவும் விரைவாய்
முடுகிமேல் எழுகின்ற பெருங்குதிரை உருவம்
பொன்காலால் நன்னிலத்தை உதைத்தெழுந்து பறந்து
பொலிகின்ற தேருடனே களத்திடையே காட்டிக்
கொண்டுகிறாய் வீரத்தை! கிழிக்காதே திரையைக்
கெஞ்சுகின்றேன் அழிக்கின்றாய் கெழீஇயிலி நீயார்? (7)

விரிந்தபெரு வானத்துத் திரைமுழுதும் கறுத்து
உயர்ந்ததோர் மலைத்தொடரே நிறைத்துப்பின் பொன்னால்
பாந்தஅதன் நெற்றியிலே வில்லெழுதி அதற்குப்
பக்கலிலே பாய்கின்ற புலியெழுதி நீந்தும்
திறந்தவாய் மீனெழுதித் தொல்தமிழின் வீரம்
பொறிக்கின்றாய் உள்ளத்தில் வல்லவனே! இதையும்
பறிக்காதே வேண்டுகிறேன் பார்க்கட்டும் தமிழர்
பறந்தேனோ அழிக்கின்றாய் பண்பில்லாய் நீயார்? (8)

---

செய்கின்ற சூழ்நிலைகளை உண்டாக்கிக்கொள்வதற்கும், செயற் குழுவினரும் தொண்டர்களும் இருந்து பணிமேற்கொள்வதற்குமாகச் சென்னையில் தக்க ஓர் இடத்தில் 'குருகுலத்தார் கிளர்ச்சி நிலையம்' ஒன்று அமர்த்திக் கொள்வது என்று எண்ணியிருக்கின்றனர். ஆசிரியர் இசைவும் இதற்குக் கிடைத்திருக்கிறது.

ஆகவே குருகுலத்தார் பலரும் அங் கிளரொளி நிலையத்தில் ஊக்கங் கொண்டு அதனைத் தக்கபடி அமைத்து நடத்த ஆவன செய்ய வேண்டும் என்று இதன்வழிக் கேட்டுக் கொள்ளப் பெறுகின்றனர் இவ்வமைப்பினால் குருகுலத்தார்க் கிடையில் மேல் மேல் இணக்கமும் தொண்டுணர்ச்சியும் பல வளர்ச்சிகளும் பிற நலங்களும் உண்டாகும் என்று தோற்றுகின்றது.

சென்னையிற் பேட்டைத் தொண்டுகள், 'புறநானூறு' 'சித்தியார்' போன்ற விரிவுரைத் தொண்டுகள், வெளியூர்ச் சுற்றுப் பயணத் தொண்டுகள், குருகுலம் மேற்கொண்டுள்ள ஏனைப் பணித் திட்டங்கள், திருமுறைப் பெருவிழா குறள் விழா மெய்கண்ட விழா ஏனை நூல் விழா போன்ற நன்முயற்சிகள் பலவும் இனிது நடத்துதற்கு இச் செயற்குழுவின் அலுவலகம் பெரிது பயன் தரும் என்றும் தோற்றுகிறது.

ந. ரா. ஆடலரசு.
(செய்தியாளன்)

## ஒரு பாட்டு

நீலவானத்தில் அழித்துப் பல ஓவியங்கள் நாள்தோறும் எழுதப்படுகின்றன. குன்றுபோல் முகில் எழுந்து நிற்கும்—; மலையெனப் பெரிதாகும்; பனியுருகுவதுபோல மெல்ல மெல்லக் கரைந்து மறையும். சிறிய மலைத்தொடர்கள் போல் காணும், பின்னர்ச் சமவெளிகள்போல் பரந்து தோன்றும் பஞ்சுபோல் சில நேரங்களில் மேகம் எழுந்து தவழும்; நெஞ்சையீர்க்கும் வண்ணம் அழகிய நங்கையுருவில் நிற்கும்—; சிறிது நேரங் கழித்து மான்போல் மாறித் தோற்றமளிக்கும்; மயில்போல் நடந்து ஆடி மனதையீர்க்கும்- மறையும்—நிறம் மாறும். செக்கர் வானம் தோன்றும்—செவ்வாழைக் குலைகளைத் தாக்கி நிற்கும் கோலங்களைக் காணலாம். அழலின் நிறம் காணும். அடுக்கடுக்காக அழகிய பொருள்களின் உருவங்கள் தோன்றித் தோன்றி மறையும்.

இத்தகைய அழகிய காட்சிகள் யாருக்குப் புலனாகும்? விஞ்ஞானிக்குப் புலனாகுமா? எதை எடுத்தாலும் ஆய்ந்து மகிழும் ஆய்வாளனுக்குப் புலப்படுமா? யாருக்குப் புலனாகும்? கவிஞன் ஒருவனுக்கே புலனாகும். இயற்கையின் அசைவுகளில் அழகைக் காண வல்லவன் அவன் ஒருவனே. இயற்கையின் எல்லா வகை உரு

---

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

வங்களிலும் புதுமையைக் காண வல்லவனும் அவனே. உலகம் உணராதவொன்றை உய்த்துணர்ந்து தான் சுவைத்ததைப் பிறரும் சுவைக்கும் வண்ணம் அழகாக எடுத்துச் சொல்ல வல்ல ஆற்றல் படைத்தவனும் அவனேயாவான்.

கவிஞனுடைய உலகத்தில் உயிரில்லாத மரங்கள் பேசும்—மாதவிக்கொடி பேசும்—முல்லை மலர் பேசும். அவனுடன் வண்ணாத்திப் பூச்சி பேசும்—தும்பி கவிபாடும்—வண்டுயாழ் செய்யும்—பறவைகள் பேசும்—விலங்கினங்கள் மகிழும்—உயிரினங்கள் எல்லாம் அவனுடன் கூடிக் குலவும், குதித்து ஆடும்; உள்ளத்திற்கு இனிமை சேர்க்கும்; கற்பனை யூற்றுக் காவிரி போல் பெருக் கெடுப்பதற்கு ஏற்ற துணையாய் விளங்கும்.

ஆம்! அப்படிப்பட்ட உலகத்தில் வாழும் கவிஞன் பாடியது தான் அந்தப் பாட்டு. தன்னை மறந்த நிலையில் ஆறுலும் உலகத்திலிருந்தபடி பாடியதுதான் அந்தப் பாட்டு.

புலவன் பொருளைக் காணுகின்றான். அந்தப் பொருள் அவனுடைய கண்வழிப் புகுந்து கருத்தில் கலந்து ஏதோ ஒரு புதிய உணர்ச்சியை ஊட்டுகின்றது. அப் பொருள்மேல் அவாக் கொண்டு மீண்டும் மீண்டும் கண்டு வியக்கிறான். அவனுடைய வியப்பு அன்பாக மாறிக் காதலாக முகிழ்க்கின்றது. பொருளோடு ஒன்றிவிடுகிறான்; இரண்டறக் கலக்கிறான்; அந்தக் கலப்பிலே ஒரு புதிய பொருள் உண்டாக்கப்படுகிறது; அதுவே கவிதையாக வெளிப்படுகின்றது.

“உன்னையென திருவிழியால்
காணுகின்றேன்
ஒளி பெறுகின்றேன் இருளை
யொதுக்குகின்றேன்
இன்னலெலாம் தவிர்கின்றேன்
களி கொள்கின்றேன்
எரிவில்லை குளிர்கின்றேன்
புறமும் உள்ளும்
அன்புள்ளம் பூணுகின்றேன்
அதுவும் முற்றி
ஆகாயம் அளாவுமொரு
காதல் கொண்டேன்
இன்பமெனும் பால் நுரையே
குளிர் விளக்கே
எனை இழந்தேன் உன்
னெழிலில் கலந்ததாலே!”

என்று நிலவைக் கண்டு கவிஞன் பாடும் பாட்டில் மேற்சொன்ன நிலைகளையெல்லாம் காண முடியும்.

பொருளோடு கவிஞன் கலக்க வேண்டும். அப்படிக் கலக்காவிட்டால் கவிதை விளையுமாறு இல்லை கவிதை அகத்தெழுச்சியின் (Inspiration) விளைவு. அத்தகைய அகத்தெழுச்சி மிக்குடையார் ஒருவரால் பாடப்பட்டதே அந்தப் பாட்டு. ‘பொருளோடு ஒன்றித் தான் சுவைத்த இன்பத்தைப் பிறரும் சுவைத்து மகிழ வேண்டும்’ என்ற, கலைஞன் ஒருவனுக்கே உரித்தான பெருநோக்கத்தின் விளைவாலே வடித்து இறக்கப்பட்ட தூய அமிழ்தந்தான் அந்தப் பாட்டு.

காட்டையொட்டிய நிலப் பகுதி அந்தப் புலவர் சென்ற வழி. முல்லைக் கொடிகள் எங்கும் படர்ந்து அணிசெய்தன. கொத்துக் கொத்தாக முல்லை முகை விரித்து மணம் பரப்பிக் கொண்டிருந்தது. புலவர் மணத்தையுண்டார். வெண்சோறுபோல் விளங்கிய பூக்களின் வண்ணத்தையும் கண்டு வியந்தார்.

புலவர்களுக்குப் பூவினிடத்தில் ஈடுபாடு அதிகமுண்டு. ஆனால் பெண்பால் புலவருக்கு அதன்மேல் பெருங்காதல் உண்டென்றே கூறவேண்டும். பெண்களே பூக்களைப் பெரிதும் விரும்பிப் பறித்து அழகுறக் கட்டி அணிந்து அவைகளின் இனிமையை நுகர்ந்து மகிழ வல்லவர்கள் அல்லவா! ஒரு பெண் பல வகையான பூக்களைப் பறித்து அழகாகக் கட்டித் தலையில் வைத்து ஒப்பனை செய்துகொண்டாள் என்று குறிஞ்சிக்கலியில் கபிலர் இணைப்பதும, ‘மாதவி தன்னை அலங்கரித்துக் கொள்ள வைத்துக் கொண்ட பூக்களையும் அவைகளைத்தான் அணிந்து கோவலனுக்கு மகிழ்ச்சி யூட்டிய நாட்களையும் நினைவூட்டுவான் வேண்டி பல மலர்களால் அணி செய்யப்பட, தாழையின் வெள்ளிய இதழில் செம்பஞ்சுக் குழம்பை முல்லை முகையால் எடுத்து எழுதி அனுப்பினாள்,’ என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் எடுத்துரைப்பதும் பெண்ணியலார் பூக்களிடத்துப் பெருவிருப் புடையார் என்பதைப் புலப்படுத்துமன்றோ!


Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்




பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை.


பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)